மாலை முரசு
பக்கங்கள் 20+3
முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 10 புதன்கிழமை 23.04.2025 | அதிர்வு 263

## இந்த வருடம் இதுவரை 26 பேர் சுட்டுக்கொலை



(எஸ்.ஜினோதன்)

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் இன்று (23) வரையில் நாடு

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்





# தொடரும் கொலைகளுக்கு அநுர அரசாங்கமே பொறுப்பு

## சஜித் பகிரங்கக் குற்றச்சாட்டு

“இலங்கையில் கொலைக் கலாசாரம் தலைதூக்கி வருகின்ற நிலையில், அதனைத் தடுக்க முடியாமல் அநுர அரசாங்கம் மௌனம் காக்கும்போது, தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பில்லை என எவ்வாறு கூறுவது என்பதில் பிரச்சினை காணப்படுகின்றது.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

புலத்சிங்கள பிரதேசத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

02

### டொன் பிரியசாத் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம்:

# கஞ்சிப்பான இம்ரானின் சகாக்கள் மூவர் சிக்கினர்



சமூக மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் டொன் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த கஞ்சிப்பான இம்ரானின் சகாக்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு, வெல்லம்பிட்டிய பகுதியில் வைத்து டொன் பிரியசாத் மீது நேற்று இரவு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருந்தது.

02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# இலங்கையில் மீண்டும் வீரியம் காட்டும் மலேரியா

(எஸ்.ஜினோதன்)

இலங்கையில் மலேரியா காய்ச்சல் மீண்டும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரவல் சமீபத்தில் வெளிநாடுகளில் இருந்து திரும்பிய நபர்களிடம் கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

மலேரியா மீண்டும் இலங்கைக்கு வருவதைத் தடுக்க வலுவான திட்டத்தைப் பராமரித்து வருவதாகவும் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இந்த வருடம்...**

முழுவதும் 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களின்போது 26 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த 37 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 23 சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களால் நடத்தப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதேநேரத்தில், மீதமாகக் காணப்படும் 14 சம்பவங்கள் தனிப்பட்ட தகராறுகள் காரணமாக நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

**கஞ்சிப்பான...**

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றிருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த டொன் பிரியசாத், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தவதற்காகப் பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்நிலையிலேயே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

**தொடரும் கொலைகளுக்கு...**

"நாட்டு மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதற்கும், தமது அன்றாட வாழ்க்கையைப் பாதுகாப்பான முறையில் கழிக்கவும் ஏற்ற சூழலை உருவாக்கித் தர வேண்டியது நாட்டை ஆளும் அரசாங்கத்தினது கடமையாகும். தற்போதைய அரசாங்கத்துக்கு இரு தேர்தல்களிலும் பெரும் மக்கள் ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. முறைமையில் மாற்றத்தை மக்கள் எதிர்பார்த்தனர்.

இன்று நாட்டில் பயங்கரமான சூழ்நிலை உருவாகி, கொலைக் கலாச்சாரம் தலைதூக்கியுள்ளது. இந்த வருடம் ஆரம்ப காலப்பகுதிக்குள் மட்டும் அதிக அளவில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அச்சமின்றி வீடுகளுக்குள் நுழைந்து துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலை இன்று காணப்படுகின்றன. வீதிகளில் சுதந்திரமாக நடமாடக்கூட முடியாத நிலையை நாடு எட்டியுள்ளது.

வர்த்தகர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அரசியல்வாதிகள் என சகலருக்கும் துப்பாக்கிச் சூடு நடத்தும் நிலைக்கு நாடு தற்போது வந்துள்ளது. இது தொடர்பில் நாடாளுமன்ற சபை அமர்வுகளிலும் வெளியிலும் கேள்வியெழுப்பினால், இது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்ல என அரசாங்கம் தெரிவித்து வருகின்றது.

நாட்டில் கொலைக் கலாசாரம் தலைதூக்கி வருகின்ற நிலையில், அதனைத் தடுக்க முடியாமல் அரசாங்கம் மௌனம் காத்து இருக்கும் போது, தேசிய பாதுகாப்புக்குப் பாதிப்பில்லை என எவ்வாறு கூறுவது என்பதில் பிரச்சினை காணப்படுகின்றது. இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அங்கத்தவர்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் வகுப்புகளை நடத்துவதற்குக் கூட முயற்சித்தனர். ஆன போதிலும் தற்போதைய ஆட்சியாளர்கள் தேசிய பாதுகாப்பு தொடர்பில் டியுஷன் போக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சட்டத்தை விட தற்போது தோட்டா, வாள், கத்தி, வெடிகுண்டு என்பன வென்றுள்ளன. இவ்வாறு ஒரு நாட்டை நடத்த முடியாது. சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினையை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

சட்டம், ஒழுங்குப் பிரச்சினைக்கு அரசாங்கமே பொறுப்புக் கூறவும் வேண்டும். குழந்தைகள், பெண்கள், தாய்மார்கள் என குடிமக்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லை.

அச்சத்தோடு தமது நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய நிலைக்கு இன்று குடிமக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தினந்தோறும் அச்சத்தோடு பொழுதை கழித்து விட முடியாது. இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நீதிமன்றங்களுக்குள்ளும் கொலைகள் இடம்பெற்று வரும் நாட்டில் நாம் வாழ்ந்து வருகின்றோம்.

நாடு எங்கே சென்று கொண்டிருக்கின்றது? சட்டம், ஒழுங்கை சரியான முறையில் பேண வேண்டும். அரசாங்கம் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதனைச் சாதாரணமாக கடந்து விட முடியாது. இந்தப் போக்கு சரியான போக்கல்ல. மறுபுறம் மக்கள் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கையில் இருந்து இப்போது விலகிச் செல்கின்றனர்.

விகாரைகள், வணக்கஸ்தலங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள் ஊடாக சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைந்து காணப்பட்டன. இன்று இவை இல்லை. இன்று இந்த ஆளுந்தரப்பினரிடம் வெறும் வாய்ப் பேச்சும், ஆணவப் பெருமிதமுமே காணப்படுகின்றன.

மக்களிடம் பொய் சொல்லி, 24 மணி நேரமும் மக்களை ஏமாற்றி பொய்யான அரசியலைச் செய்யும் நிலையே காணப்படுகின்றது. இந்தப் பொய், ஏமாற்று, மற்றும் செயல் இல்லாத வெறும் வாய்ப்பேச்சுக்களை வைத்து முன்னெடுத்து வரும் அரசியல் கலாசாரத்திற்கு முடிவு கட்ட வேண்டும். இந்த அரசியலால் நாட்டுக்கோ மக்களுக்கோ நன்மை பயக்காது.

ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனத்துக்கமைய தோட்ட சமூகத்துக்கும் வேலையற்ற இளைஞர்களுக்கும், விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத தரிசு காணிகளை வழங்கி, அவர்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவோம் என வாக்குறுதி வழங்கியிருந்தோம்.

ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறான முற்போக்கு யோசனைகளை முன்வைத்திருந்த போதிலும், இந்த அரசாங்கத்தினது பொய் அரசியலை நம்பி வாக்களித்து தெளிவான அதிகாரத்தை மக்கள் பெற்றுக் கொடுத்தனர். என்றாலும் துரதிஷ்டமாக இன்று இந்த மக்கள் கை விடப்பட்டுள்ளனர். முன்னைய அரசாங்கங்கள் கூறிய பொய்களோடு சேர்த்து தற்போது புதிய வகையான பொய்களையும் இந்த அரசாங்கம் நாளுக்கு நாள் கூறி வருகின்றது." – என்றார்.

### கஜேந்திரகுமார் தலைமையிலான

# தமிழ்த் தேசிய மக்கள் பேரவையினருக்கு யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் ஆதரவு!




தேசிய மக்கள் சக்தியின் பொறிக்குள் வீழாது காலச் சூழலுக்கு ஏற்ப தமிழ் தேசியப் பரப்பில் பயணிக்கும் கட்சிகளுடன் ஒன்றிணைந்து பயணிக்கும் நோக்கில் இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியப் பேரவைக்கு ஆதரவை வழங்கவுள்ளதாக யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் தலைவர் அப்துல் பரீக் ஆரீப் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் பேரவைக்கு ஆதரவு வழங்கும் அறிவிப்பை விடுத்திருந்த யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியம் அது தொடர்பில் ஊடக சந்திப்பை இன்று புதன்கிழமை யாழ். ஊடக மையத்தில் நடத்தியது.

இதன்போது யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

“அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்ஃடன் யாழ். முஸ்லிம் மக்களுக்கு நெருங்கிய தொடர்பும் நட்பும் இருந்து வருகின்றது.

அதுமட்டுமல்லாது கொள்கையில் தடுமாறா நிலையுடன் பயணிக்கும் கஜேந்திரகுமார் தலைமையிலான கட்சி எமது மக்களின் நலன்களில் அதிக அக்கறையுடன் பயணித்து வருகின்றது.

இவ்வாறான நிலையில் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப கொள்கையுடன் தமிழ்த் தேசியப் பேரவை இருக்கின்றது.

அதனடிப்படையில் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் எமது அமைப்பின் ஆதரவை தமிழ்த் தேசியப் பேரவைக்கு வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். எனவே, முஸ்லிம் மக்கள் ஓரணியில் திரண்டு தமிழ்த் தேசியப் பேரவைக்கு ஆதரவை வழங்க வேண்டும்.” – என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் யாழ். முஸ்லிம் மக்கள் ஒன்றியத்தின் உறுப்பினர் எம்.எஸ். ரஹீம் உடனிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்த இராணுவத்திடம் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது!

### ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் தீர்மானம்

வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈ தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த இராணுவத்தினரிடம் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதன்போதே வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர்,

”வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு எமது திணைக்களங்களால் போதிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பல தடவைகள் கலந்துரையாடப்பட்டாலும் செயற்பாட்டு ரீதியில் அதன் தாக்கத்தை மக்களால் உணர முடியவில்லை. எமக்கு தினந்தோறும் மக்களிடமிருந்து வெள்ளை ஈ தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடிதம் அனுப்புகின்றனர்.

தென்னையை வாழ்வாதாரமாகக் கொண்டு வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இருக்கின்றன. எனவே, அவர்களின் பாதிப்புக்களை கருத்திலெடுத்து இதைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

2023ஆம் ஆண்டு காலப் பகுதியில் வெள்ளை ஈ தாக்கம் பரவிய போது எடுக்கப்பட்ட முயற்சிகளின் அளவைக்கூட இப்போது காண முடியவில்லை.” – என்றார்.

வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தால் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்கு சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக அதன் பணிப்பாளர் இதன்போது ஆளுநரிடம் சுட்டிக்காட்டினார்.

தென்னை பயிர்ச் செய்கை சபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன் வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவது தொடர்பில் சில விடயங்களைத் தெளிவுபடுத்தினார்.

கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், தென்னை பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.





பாப்பரசருக்கு இறுதி அஞ்சலி செலுத்த

# இத்தாலி சென்றார் கர்தினால் மெல்கம்

(எஸ்.ஜினோதன்)

பரிசுத்த பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பாப்பரசரின் புனித உடலுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இத்தாலிக்குப் பயணத்தை மேற்கொண்டார்.

கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இன்று காலை 9.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து அபிதாபி சென்று, பின்னர் அங்கிருந்து மற்றுமொரு விமானத்தில் இத்தாலிக்குச் சென்று புனித பாப்பரசரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்ள வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# 30 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது!

(கி.வசந்தன்)

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் 30 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பூவரசங்குளம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்று இரவு வீடொன்றைச் சோதனை செய்த பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 போத்தல் சட்ட விரோத சாராயத்தைக் கைப்பற்றினர்.

அதனை உடமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 48 வயதுடைய நபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழ். பல்கலைக் கலைப் பீடத்தில் பொற்கலைச் சங்கமம் நிகழ்வு!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட பழைய மாணவர்களது ஏற்பாட்டில் 'வேரிலிருந்து விழுதுவரை' என்னும் தலைப்பில் பொற் கலைச் சங்கமம் நிகழ்வு எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடத்தில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பொற்கலை மலர் வெளியீடு, ஓய்வு நிலை விரிவுரையாளர்கள், கல்வி சார், கல்வி சாரா பணியாளர்கள் கௌரவிப்பு, கலாசார நிகழ்வுகள், குருதிக்கொடை, விளையாட்டு நிகழ்வுகள், உண்டாடுதல் போன்றன இடம் பெறவுள்ளன.



# மட்டக்களப்பில் நடைபெற்ற ஆற்றுகை வெளிப்பாடு!



(பழுவூரான்)

லண்டன் கிரிஃபின் கல்லூரி சர்வதேச நுண்கலை தேர்வு ஆணையமும் ,மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் பாடசாலை நடன ஆசிரியை திருமதி நித்யா விக்னேஸ்வரனால் நிர்வகிக்கப்படும் அட்ஷய ஷேஸ்த்ரா பரத நாட்டிய கலைக்கூட மாணவிகளும் இணைந்து நடத்திய ஆற்றுகை மட்டக்களப்பு வில்லியம் ஓல்ட் மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்றது.

இந்த ஆற்றுகை நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஷாமினி ரவிராஜும், சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு கல்வி வலய நடனபாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மலர்விழி சிவ ஞான சோதிகுரு, முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். பவள காந்தன், மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் பாடசாலை அதிபர் திருமதி தவத்திருமகள் உதயகுமார், மற்றும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## முனகும் அரசு!

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் விவகாரம்தான் இப்போது இலங்கை அரசியலில் பிரதான பேசுபொருள்.

செல்லும் செல்லாதவை எல்லாவற்றையும் செட்டியாரின் தலையில் கட்டி அடிப்பது போல இந்தக் குண்டுவெடிப்பை ஒட்டிய எல்லா விவகாரங்களும் பிள்ளையானை மட்டும் ஒட்டிச் சுழல்வது போலக் காட்டப்படுவது பலத்த சந்தேகங்களைத் தருகின்றது.

இந்தக் குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு முன்னரே நீண்ட காலமாக பிள்ளையான் பிறிதொரு வழக்கில் கைதாகி விளக்கமறியலில் இருந்தார். இந்தத் தாக்குதல் நடந்த போதும் அவர் சிறையிலேயே இருந்தார். இந்தத் தாக்குதலை நடத்துவதற்கு உதவியதன் அடிப்படையிலேயே அப்போது அவர் குறுக்கு வழியில் வெளியே வர நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதுதான் இப்போது பேச்சு. அது உண்மையாக இருக்கலாம். அல்லது பொய்யாகவும் இருக்கலாம். இந்தக் குண்டு தாக்குதலுக்குப் பின்புலத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகளை ஒழுங்குபடுத்திக் கொடுத்த குற்றச்சாட்டு விளக்குமறியலில் இருந்த பிள்ளையான் மீது சுமத்தப்படுகின்றது.

அது உண்மையாக இருந்தாலும் கூட, இந்தக் கொடூரக் குற்றத்தில் அது ஒரு சிறிய பகுதிதான்.

பிள்ளையானின் இந்த உதவியைப் பெற்று அந்த இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு உதவிய புலனாய்வுத் தரப்பு எங்கே என்பதுதான் கேள்வி.

பிள்ளையானை வேறொரு வழக்கில் கைது செய்து, அதன் பெயரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துக் கொண்டு, அரசியல் அறிக்கைகளை வெளியிட்டுத் தள்ளும் அரசுத் தலைமை, 2019 இல் சிறையில் இருந்த பிள்ளையானின் இந்த உதவியைப் பெற்று, இந்த குண்டுத் தாக்குதலை வழி நடத்திய சூத்திரதாரிகள் குறித்து வெளியே கோடி காட்டாமல் ஒளித்துப் பிடித்து விளையாடுவது ஏன் என்று கேள்வி எழுகின்றது.

இங்குதான் சிங்கள பேரினவாதத்தின் உண்மை முகம் புதைந்து கிடப்பதை இப்போதாவது பிள்ளையான், கருணா போன்றவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தங்களுக்கு - சிங்கள பேரினவாதத்துக்கு - ஒட்டுண்ணியாக இருந்து உதவிய தமிழர் தரப்பை அரசியல் ரீதியிலும் குற்றவியல் ரீதியிலும் போட்டடித்துத் தாக்குவதற்கு பின்நிற்காத கொழும்பு ஆட்சிப் பீடம், இந்த கொடூரங்களில் சம்பந்தப்பட்டவை எனச் சந்தேகிக்கப்படும் தன்னுடைய புலனாய்வு மற்றும் படைத்தரப்புகளைக் காபந்து பண்ணி சமாளிப்பதில் அதிக ஈடுபாடு காட்டுகின்றதா என்ற சந்தேகம்தான் வலுக்கின்றது.

இந்த விவகாரத்தில் பிள்ளையான் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டின் விடயங்கள் அதைத் தாண்டி முன்நகர்வதாக இல்லை. பிள்ளையான் மீது குற்றச்சாட்டுகளை அடுக்கும் அரசுத் தரப்புப் பேச்சாளர்கள், அதற்கு அப்பால் விடயத்தைக் கோடி காட்டக் கூட தயாராக இல்லை. விடயம் புலனாய்வில் - விசாரணையில் - இருப்பதால் அது பற்றி வெளிப்படுத்துவதில் நெருக்கடி இருக்கலாம். ஆனாலும் அதையும் தாண்டியும் விடயங்கள் இருக்கின்றன. அவற்றில் மேலிடங்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கோடிகாட்டி வெளிப்படுத்தக் கூட அரசு தரப்பு தயாராக இல்லை.

இதுவரை காலமும் தனது பேரினவாத மேலாதிக்கப் போக்கின் ஒரு முகமாகக் காட்டி வந்த தரப்புகள் மீது சந்தேகப் பார்வையைத் திருப்புவது தென்னிலங்கைக்கு சிக்கல் தருவதாக இருக்கும். அதனால் அரசுத் தலைமை பிள்ளையானுக்கு அப்பால் விடயத்தை நகர்த்த விரும்பாது மட்டுப்படுத்தி வாசிக்கின்றதா என்ற பொதுவான சந்தேகமே எழுகின்றது.

சிறையில் இருந்த பிள்ளையானால் இந்த விடயத்தில் குற்றம் இழைத்திருக்க முடியுமாயினும் அது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்திருக்க முடியும். அதைத் தாண்டி இந்த விடயங்களை ஒழுங்குபடுத்தி, ஒத்தாசை புரிந்து, முன்நகர்த்திய தரப்புகள் குறித்து வாய் திறக்கவே தென்னிலங்கை அஞ்சுகிறது. அவர்களையும் மடக்குங்கள் என்பதுதான் கிறிஸ்தவ திருச்சபையின் கோரிக்கை. ஆனால் அது பற்றி வெளிப்படையாக பேசவோ, சாடை மாடையாகக் கோடி காட்டவோ கூட கொழும்பு அரசுக்குத் தைரியம் இல்லை.

காலாகாலமாகத் தன் பேரினவாத இலக்கை அடைவதற்காக - சிறுபான்மையினர் மீது கொடூரங்களை கட்டவிழ்த்து விட - எந்தத் தரப்புகளைத் தன் கருவியாக கொழும்பு பயன்படுத்தியதோ, அந்தத் தரப்புத்தான் பிள்ளையானுக்கு அப்பால் இந்த குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்டிருப்பதால், அது பற்றி வெளிப்படையாக பேச முடியாமல் முனகுகின்றது அரசு தரப்பு. அவ்வளவுதான்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்





# தமிழர் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பது சொந்தக் காசில் சூனியம் வைப்பது போன்றதே!

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் தெரிவிப்பு

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு அதாவது ஜே.வி.பிக்கு வாக்களித்தால் அது தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த காசில் சூனியம் வைத்துக் கொண்டதற்கு நிகராகிவிடும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அம்பாள்குளம் கிராமத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த உள்ளூராட்சித் தேர்தல் மிக முக்கியமான காலக்கட்டத்தில் இடம் பெறுகிறது.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தல் நடைப்பெறவுள்ளது.

எனவே உள்ளூர் அதிகாரங்கள் அந்தந்த உள்ளூர் தரப்பினர்களிடமே இருக்க வேண்டும். அதிகாரப் பகிர்வுக்காகப் போராடிய அதற்காகப் பல தியாகங்களைச் செய்த இனம் நாம். அந்த தியாகங்களுக்கு ஈடாக தீர்வுகள் இது வரை கிடைக்காத போதிலும் கிடைத்த இந்த உள்ளூர் அதிகாரத்தையாவது நாம் தொடர்ந்தும் எங்களுக்குள் வைத்திருக்க வேண்டும். அதுவே தமிழ் இனத்தின் எதிர்கால அரசியல் உரிமைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நகர்வுகளுக்கு பலம் சேர்க்கும்.

ஆகவே தமிழ் மக்கள் நாட்டில் ஏற்பட்ட ஒரு பொதுவான ஒரு அலையில் சிக்குண்டு செல்வார்கள் எனில் அந்த அலை தமிழ் மக்களை சிதைத்துச் சின்னாபின்னமாக்கிவிடும். இந்த அலை என்பது இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனங்களைக் குறிப்பாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை மிக மோசமாகப் பாதிக்கும் அலை. இந்த அலைக்குள் சிக்குண்டால் ஒரு போதும் கரை சேர முடியாது போய்விடும்.

எனவே வருகின்ற உள்ளூராட்சி தேர்தலில் எங்கள் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் சங்கு சின்னத்தில் மக்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உள்ள மக்களுக்காக அர்ப் பணிப்போடு பணியாற்றக் கூடிய வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களை ஆதரித்து வாக்களித்து வெற் றிப்பெறச் செய்யுங்கள்.– என்றார்.

# தேசிய மக்கள் சக்தி அலுவலகம் மட்டு. நாவற்குடாவில் திறப்பு!

(பழுவூரான்)

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாநகர சபைக்கு உட்பட்ட நாவற்குடா வட்டாரத்துக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் நாவற்குடா பிரதான வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் இடம் பெற்றது.

ஆரம்பத்தில் கட்சி அலுவலகம் மாவட்ட அமைப்பாளரால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து நடனம்,தேர்தல் பிரச்சாரங்கள் இடம் பெற்றன.



இந்தப் பிரசாரக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கந்தசாமி பிரபு, பிரதி வெளிவிவகார, வேலைவாய்ப்பு அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, மட்டக்களப்பு மாவட்டத் தேசிய மக்கள் சக்தி அமைப்பாளர் தோழர் திலகநாதன், மட்டக்களப்பு மாநகரசபை முதன்மை வேட்பாளர் கலாநிதி கனகராஜா பிறேம்குமார் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணித் தலைவி தோழி செல்லப்பெருமாள் வனிதா உட்பட கட்சி முக்கியஸ்தர்கள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# அரசியல்வாதிகளின் பகட்டுகளை நம்பி இனியும் வாக்களிக்க மக்கள் தயாரில்லை

### கால்பந்து சின்ன வேட்பாளர் நளீர்

(நூருல் ஹுதா உமர்)

நாவிதன்வெளியை இவ்வளவு காலமும் பொய்யான வாக்குறுதிகளையும், பகட்டு கதைகளையும் கூறி ஏமாற்றி வந்த அரசியல்வாதிகளை புறமுதுகு காட்டி ஓடவிடுமளவுக்கு நாவிதன்வெளி மக்கள் தெளிவாக இருக்கின்றனர்.

ஊழல்களைச் செய்து கொண்டு இனவாதம் பேசிக்கொண்டு மக்களை ஏமாற்ற எத்தனிக்கும் அரசியல்வாதிகளுக்கும், அவர்களின் அரசியல் கட்சிகளுக்கும் மக்கள் மே 06 இல் நல்ல பாடம் கற்பிப்பார்கள்.

இவ்வாறு நாவிதன்வெளி பிரதேச சபைக்கு கால்பந்து சின்னத்தில் சுயேச்சையாகத் தலைமை வேட்பாளராக போட்டியிடும் நளீர் பௌண்டஷன் நிறுவுனர் எம்.ஏ. நளீர் தெரிவித்தார்.

நாவிதன்வெளி பிரதேச சபை வேட்பாளர் முஹம்மட் ஹலால் தலைமையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தமிழ் தேசிய கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும், அகில இலங்கை மக்கள் காங்கிரசும் இன்னும் சில சில்லறை கட்சிகளும் சேர்ந்து கொண்டு தேர்தல் காலங்களில் இங்கு படையெடுத்து நடைமுறை சாத்தியமற்ற வாக்குறுதிகளை வழங்கி அவற்றை ஒருகாலமும் நிறைவேற்றாது. ஏமாற்றும் வேலையையே தொடர்ந்து செய்து வருகிறார்கள். இவர்களின்



ஏமாற்று அரசியலை நம்பி நாம் தொடர்ந்தும் இவர்களுக்கு வாக்களிக்க முடியாது.

அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளையும், பகட்டு கதைகளையும் நம்பி இன்னும் வாக்களிக்க மக்கள் தயாரில்லை என்பதை நாங்கள் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் தெளிவாக கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

நாவிதன்வெளி பிரதேசத்தை இருண்ட பிரதேசமாக தொடர்ந்தும் வைத்திருக்க முடியாது. எமது பிரதேச வளங்களை முழுமையாக பயன்படுத்தி அவற்றை கொண்டு மக்களின் வாழ்வியலை மேம்படுத்த தேவையான வேலைத் திட்டங்களை நாங்கள் வென்றால் நிச்சயம் செய்வோம் என்பதை மக்கள் நன்றாக அறிவார்கள்.

பொய்யான கதைகளை கூறி ஆட்சியை பிடித்த ஆளும் தரப்பினர் தோல்வியை அறிந்துகொண்டு இப்போது மேடைகளில் தடுமாற ஆரம்பித்துள்ளார்கள். எங்களிடம் எவ்வித தடுமாற்றங்களும் இல்லை. அதிகாரமில்லாது நாங்கள் கடந்த காலங்களில் செய்து கொண்டிருந்ததை இப்போது அதிகாரத்துடன் செய்ய மக்களை நாடி வந்துள்ளோம். இதனை மக்கள் நன்றாக அறிந்து வைத்துள்ளனர். கடந்த காலங்களில் சர்வதேச உதவிகளை பெற்று நாவிதன்வெளி பிரதேச நிறைய உட்கட்டமைப்பை நாங்கள் செய்துள்ளோம். வீடமைப்பு, நீர்வழங்கல், மின்சாரம் வழங்கல், வாழ்வாதாரம் வழங்கல், உதவிங்களை வழங்குதல் என நிறைய சேவைகளை அதிகாரமில்லாமலே செய்துள்ளோம். அதிகாரம் கிடைக்கும் போது உத்வேகத்துடன் நிறைய பணிகளை மக்களுக்கு செய்ய தயாராக இருக்கிறோம்.– என்றார்.

இந்தக் கூட்டத்தில் நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உப தவிசாளர் ஏ.கே. அப்துல் சமட், பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம். சுவைதீன், நாவிதன்வெளி பிரதேச சபைக்கு கால்பந்து சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடும் வேட்பாளர்கள், முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்




# மாளிகைக்காடு மேற்கு வட்டார தேர்தல் அலுவலகம் திறப்பு!

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேச சபை தேர்தலுக்கான ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் மாளிகைக்காடு மேற்கு வட்டார தேர்தல் அலுவலகத் திறப்பு விழா வேட்பாளர் எஸ்.எச்.எம்.சாஜித் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவரும் தொழிலதிபருமான கலாநிதி ஹக்கீம் செரீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தேர்தல் அலுவலகத்தைத் திறந்து வைத்தார்

அங்கு உரையாற்றிய ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் உப தலைவர் தொழிலதிபர் கலாநிதி ஹக்கீம் செரீப்,

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபையில் இரண்டு ஆசனங்களை கைப்பற்றுவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்தவர்கள் இதுவரை என்ன செய்திருக்கின்றார்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்தவர்கள் எதைச் செய்தார்கள். அவர்கள் உங்களுக்கு ஏதாவது ஒன்றை செய்திருந்தால் இங்கு நாங்கள் வரத் தேவையில்லை.

உங்களது பெறுமதியான வாக்குகளை அவர்களுக்கு வழங்கி விட்டு இன்று எதைச் சாதித்து இருக்கிறீர்கள். எதையுமே சாதிக்கவில்லை. நாங்கள்



எமது கட்சியின் சார்பாக இன்று இளைய தலைமுறைக்கு இடம் கொடுத்துள்ளோம். இந்த வட்டாரத்துக்கு ஒரு இளைஞனைக் களமிறக்கி இருக்கின்றோம். நாளை அந்த சாஜித் என்ற இளைஞன் காரைதீவு சபையில் இருக்கின்ற போது உங்களுக்காக குரல் கொடுப்பார்.

நாங்கள் எதிர்வரும் தேர்தலில் இரண்டு ஆசனங்களைக் காரைதீவு பிரதே சபையில் பெற்றுக் கொள்வது உங்கள் கைகளில்தான் இருக்கின்றது. இதற்காக வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் போராளிகள் முன்னெடுத்துவரும் களச் செயற்பாடுகளை முழு வீச்சுடன் முன்னெடுக்க வேண்டும். போலிப் பிரச்சாரங்களுக்கு கூட்ட மேடைகளில் தக்க பதில் வழங்கப்படும்.- என்றார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ஏ.எம்.அகுவர், மாளிகைக்காடு கிழக்கு வட்டார வேட்பாளர் இளம் ஆளுமை சமூக செயற்பாட்டாளர் ஆர்.எம். தானிஸ் ரஹ்மதுல்லாஹ், வட்டாரங்களின் வேட்பாளர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு நிகழ்வு

(உடப்பு க.மகாதேவன்)

வரலாற்று சிறப்பு வாய்ந்த புத்தளம், உடப்பூரின் சித்திரைச் செவ்வாய் முளைக்கொட்டு முதல் நிகழ்வுகள் உடப்பு தமிழ்க் கிராமத்தில் நேற்று (22)ஆரம்பமானது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (20)முளைப்பதித்தல் மூலம் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த சித்திரைச் செவ்வாயின் முக்கிய நோக்கமானது, இந்த மாதத்தில் வெயில் அகோரமானதாகும். இதனால் அம்மை நோய் மக்களுக்கு ஏற்படுவதுண்டு. அதை நிவர்த்தி செய்யும் முகமாகவும், மாரியம்மனை வேண்டியும், இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

அத்துடன் மழையை வேண்டியும் இது நிகழ்வு செய்யப்பட்டது என்று அறியப்படுகின்றது. இறுதி சித்திரைச் செவ்வாய் எதிர்வரும் 30 ஆம் திகதி நிறைவடையும்.



# ஞானச்சுடர் 328 ஆவது மலர் வெளியீடும் மாணவர்களுக்குச் சைக்கிள் வழங்கலும்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞானச்சுடர் சித்திரை மாத 328 ஆவது மலர் வெளியீடு இடம்பெறவுள்ளது.

வெளியீட்டுரையை இளைப்பாறிய கிராம சேவையாளர் க.ஸ்ரீஸ்கந்தராசாவும் மதிப்பீட்டுரையைச் சட்டத்தரணியும் பதில் நீதிவானுமான சோ. தேவராஜாவும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதி வழங்கல் இடம்பெறும். இதனை அடுத்து 06 மாணவர்களுக்குச் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.









# அதிகாலையில் கிழக்கு வானில் ஒரு வசீகரமான நிகழ்வு

எதிர்வரும் 25 ஆம் திகதி சூரிய உதயத்துக்கு முன் அதிகாலை 5 மணியளவில் கிழக்கு அடிவானை நோக்குவோருக்கு மீனராசியில் பிரகாசமான வெள்ளிக் கிரகமும் மங்கல் நிலையிலான சனிக்கிரகமும் அருகருகில் தோற்றுவதையும் இவற்றுக்குக் கீழ் தேய்பிறைச் சந்திரனையும் காணக் கூடியதாக இருக்கும். (படம் 1, படம் 2)

வெள்ளி, சனி, தேய்பிறைச் சந்திரன் இவை மூன்றையும் சேர்த்து நோக்கும் போது வானத்தில் புன்னகைக்கும் முகம் போன்ற ஒரு தோற்றத்தை உணர முடியும் என்பதே இந்த நிகழ்வின் சிறப்பாகும்.

வெள்ளி, சனி ஆகிய இரண்டு கிரகங்களும் புன்னகை முகத்தின் கண்கள் போலவும், மென்மையான பிறை நிலவு வாய் போலவும் அமைவதாக கற்பனை பண்ணி வானத்தில் புன்னகை முகத்தை இரசிக்க முடியும். (படம் 3)




கிழக்கு அடிவானத்தை மிகத் தெளிவாக நோக்கக் கூடிய பகுதியில் உள்ள பார்வைக் கூர்மையுடையவர்கள் அல்லது தொலை நோக்கியை பயன்படுத்துபவர்கள் புன்னகைமுகத்தின் கீழ் புதன் கிரகத்தையும் அவதானிக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது.

திருக்கணித பஞ்சாங்கம் சனி கிரகம் மீனராசில் தற்போது உள்ளதாகக் கணித்து தனது பஞ்சாக்கத்தில் வெளிப்படுத்தியுள்ள போதும் வாக்கிய பஞ்சாங்கம் கும்பத்திலேயே தற்போதும் சனி கிரகம் உள்ளதாக குறிப்பிடுவது தவறு (அட்டவணை 1) என்பதை மீன ராசியில் தோற்றம் பெறும் கிரக இணைவுகளிலான புன்னகை முகம் மக்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தும்.

சரியான கணிப்புடைய பஞ்சாங்கத்தை இந்து தமிழ் மக்கள் தெரிவு செய்து பயன்படுத்துவதற்கு வலியுறுத்தும் ஒரு நிகழ்வாகவும் இந்த புன்னகை முக கிரகங்களின் இணைவுக் காட்சியைக் கண்டுகொள்ளலாம்.

| அட்டவணை 1 | வெள்ளி | | சனி | | சந்திரன் | |
|---|---|---|---|---|---|---|
| பஞ்சாங்கம் | திருக்கணிதம் | வாக்கியம் | திருக்கணிதம் | வாக்கியம் | திருக்கணிதம் | வாக்கியம் |
| இராசி | மீனம் | மீனம் | மீனம் ✓ | கும்பம் ✗ | மீனம் | மீனம் |
| நட்சத்திரம் | பூரட்டாதி | உத்தரட்டாதி | பூரட்டாதி | பூரட்டாதி | பூரட்டாதி | பூரட்டாதி |
| பாதம் | 4 | 1 | 4 | 2 | 4 | 4 |

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998


# பொத்துவில் அஸ்மினின் வாழ்க்கை வரலாற்று நூல் ஆங்கிலத்தில் வெளியீடு

(றிபாஸ்)

இலங்கையின் முன்னணி தமிழ்க் கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மினின் வாழ்க்கை வரலாற்றை ஆவணமாகக் கொண்ட் "POTTUVIL ASMIN: From Pottuvil to the World – A Global Tamil Voice" என்ற தலைப்பில் ஆங்கில நூல் Amazon Kindle வழியாக வெளியிடப் பட்டுள்ளது.




இந்த நூல் வெளியீட்டு விழா, சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற நிகழ்வில் லைக்கா குழுமத்தின் தலைவர் அல்லிராஜா சுபாஸ்கரன், லைக்கா ஹெல்த் நிறுவனத் தலைவர் டாக்டர் பிரேமா சுபாஸ்கரன், மற்றும் லைக்கா புரொடக்ஷன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஜி. கே. எம். தமிழ்குமரன் ஆகியோரால் வெளியிடப்பட்டது.

பொத்துவில் அஸ்மின், இசையமைப்பாளர் மற்றும் நடிகர் விஜய் ஆண்டனியின் இசையில் உருவான "தப்பெல்லாம் தப்பே இல்லை" பாடலின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமானவர்.

27 ஆண்டு காலமாக கலை, இலக்கியம், ஊடகம் மற்றும் சினிமா துறையில் குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு செய்திருக்கும் பொத்துவில் அஸ்மின், நடிகர் விஜய் ஆண்டனியின் நான் திரைப்படத்தில் "தப்பெல்லாம் தப்பே இல்லை" என்ற பாடலின் ஊடாக தமிழ் சினிமாவில் அறிமுகமானவர்.

"விடியலின் ராகங்கள்", "விடை தேடும் வினாக்கள்", "பாம்புகள் குளிக்கும் நதி" ஆகிய கவிதை நூல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார்.

மறைந்த தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியின் நினைவாகக் கவிப்பேரரசு வைரமுத்து தொகுத்த "கலைஞர் 100 கவிதைகள் 100" கவிதை தொகுப்பிலும் இவரது கவிதை இடம்பெற்றுள்ளன.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு இவர் எழுதிய இரங்கல் பாடல் "வானே இடிந்ததம்மா" அவரது சமாதியில் தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் ஒலித்தன.

பொத்துவில் அஸ்மின் எழுதிய "ஐயோசாமி நீ எனக்கு வேணாம்" பாடல் இலங்கையில் உருவாக்கப்பட்ட தமிழ் பாடல்களில் அதிக பார்வைகளை பெற்ற முதல் தமிழ் பாடலாகும்.

இலங்கையில் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் 30 மேற்பட்ட விருதுகளை பெற்றிருக்கும் பொத்துவில் அஸ்மின், கம்போடியா கலை கலாசார அமைச்சால் "சர்வதேச கவியரசு கண்ணதாசன்" விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டவர்.

பொத்துவில் அஸ்மின் வரிகளில் ஸ்ரீகாந்த் தேவா இசையில் "முல்லை சசி" குரலில் ஸ்ரீதர்மாஸ்டர், காயத்ரி சான் நடிப்பில் வெளியான "முட்டக்கண்ணி" ஆல்பம் பாடல், அமெரிக்காவில் அமைந்துள்ள சர்வதேச பாடலா சிரியர் சங்கம் வழங்கும் 2025 ஆம் ஆண்டுக்கான விருதுக்கு சர்வதேச மட்டத்தில் சிறந்த வீடியோ பாடல் மற்றும் சிறந்த பாடலாசிரியர் என இரு பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆங்கில வாழ்க்கை வரலாற்று நூல், பொத்துவிலிலிருந்து உலகளாவிய தமிழ் குரலாக உயர்ந்த அஸ்மினின் பயணத்தை ஆவணப்படுத்துவதுடன், தமிழ் இலக்கியம் மற்றும் கலைத் துறையில் அவரது தாக்கத்தையும் பதிவு செய்கிறது.







# பிரித்தானிய பிரதமர் அலுவலகம் முன்பாக அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதம்

தியாகதீபம் அன்னை பூபதியின் 37ஆவது நினைவு நாளை நினைவு கூரும் முகமாக பிரித்தானியாவில் உணவுத் தவிர்ப்பு முன்னெடுக்கப் பட்டுள்ளது.

குறித்த உணவுத் தவிர்ப்பானது சனிக்கிழமை (19) லண்டனின் மைய பகுதியில் அமைந்துள்ள டவுனிங் வீதி 10 ஆம் எண்ணிலுள்ள பிரதமர் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னலமின்றி தன்னை அர்ப்பணித்த அன்னை பூபதியின் தியாகத்தை நினைவு கூரும் வகையில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் ஒருங்கிணைப்பாளர், 'அன்னை பூபதி ஒரு மகத்தான தியாகத்தின் அடையாளம். அவரது நினைவு நாளில் அவரது இலட்சியங்களை நிலை நாட்டும் விதமாக உலக சக்திகளை நம்மை கேட்க வைக்க வேண்டிய கட்டாயம் உள்ளது' என தெரிவித்தார்.

இந்தப் போராட்டத்தில் இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

# சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகர் தொகை அதிகரிப்பு!

**(மஸ்கெலியா)**

சிவனொளிபாத மலைக்கு வரும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர மேலும் கூறுகையில்,



தொடர்ந்து வரும் விடுமுறை காரணமாகவும் பாடசாலை விடுமுறை காரணமாகவும் எதிர்வரும் வைகாசி விசாகம், பௌர்ணமி தினத்தில் சிவனொளி பாத மலை பருவகாலம் நிறைவுக்கு வரவுள்ளதாலும் யாத்திரிகர்கள் வருகை அதிகரித்துள்ளது.

வாகனங்கள் நிறுத்துமிடங்கள் நிறைந்துள்ள நிலையில் நல்லதண்ணி மரே வீதியிலும் நல்லதண்ணி மஸ்கெலியா பிரதான வீதியில் ரக்காடு கிராமம் வரை வீதி ஓரங்களில் தனியார் பஸ் மற்றும் கார், வான், ஓட்டோ, மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து நோட்டன் வழியாக மற்றும் ஹட்டன் வழியாக வாகனங்கள் வந்த வண்ணம் உள்ளன என்றும் ஆதலால் வீதி போக்குவரத்து பொலிஸார் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.– என்றார்.



# 300 அடி பள்ளத்தில் வீழ்ந்து கார் விபத்து; சாரதி படுகாயம்!

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

நல்லதண்ணி பிரதேசத்தில் இருந்து கினிகத்ஹேன, பொல்பிட்டிய நோக்கி பயணித்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி 300 அடி பள்ளத்தில் வீழ்ந்து கெசல்கமுவ ஓயாவில் விழுந்து விபத்துக்குள்ளானது என்று நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்தனர்.

காரின் சாரதி காயமடைந்து லக்ஷபான பிராந்திய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லண்ணி, கினிகத்ஹேன பிரதான வீதியில் உள்ள நோட்டன் பிரிட்ஜ் எடிட் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (22) இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

காரில் திடீரென ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக, கார் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



விபத்தில் கார் பலத்த சேதமடைந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# காரைதீவில் புத்தாண்டு மரதன் ஓட்டப் போட்டி

(காரைதீவு சகா)

சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 42 ஆவது ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் முகமாகவும் காரைதீவு விளையாட்டுக் கழகமும் விபுலாநந்தா சனசமுக நிலையமும் இணைந்து மரதன் ஓட்டப் போட்டியை நடத்தின.

காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆரம்பித்த இந்த மரதன் ஓட்டம் ஊர் வீதிகளூடாக வலம் வந்து விளையாட்டு கழகத் தை வந்தடைந்தது.

கழகத் தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கழக போசகர்களான அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன் மற்றும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.







# காஷ்மீரில் வெள்ள பாதிப்பை பார்வையிடச் சென்ற முதல்வரின் வாகனத்தை முற்றுகையிட்டனர் மக்கள்

காஷ்மீரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட சென்ற முதல்வரின் வாகனத்தை அப்பகுதி மக்கள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் ராம்பன் மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கனமழை கொட்டித் தீர்த்தது. இதனால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதுடன் நிலச்சரிவும் ஏற்பட்டது. இதனால் செரி, பக்னா, காரி உள்ளிட்ட சுமார் 12 கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலை சேதமடைந்து போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர், மாநில பேரிடர் மீட்புப் படையினர், இராணுவம், காவல் துறையினர் உள்ளிட்டோர் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்குவதற்காக, அதிகாரிகள் குழு சேதத்தை ஆய்வு செய்து வருகிறது. இதை தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என தேசிய மாநாட்டு கட்சி எம்.எல்.ஏ. அர்ஜுன் சிங் வலியுறுத்தி உள்ளார். பாதிக்கப்பட்ட பகுதியைப் பார்வையிட்ட பா.ஜ.க. மூத்த தலைவர் சுனில் சர்மாவும் இதே கருத்தை வலியுறுத்தி உள்ளார்.

இந்த சூழ்நிலையில், ராம்பன் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் உமர் அப்துல்லா நேற்று பார்வையிட்டார். அப்போது அவரது வாகனத்தை தடுத்து நிறுத்திய அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நிவாரணப் பணிகள் மெதுவாக நடப்பதாக அவர்கள் குற்றம்சாட்டினர். மேலும் இந்த சம்பவத்தை தேசியப் பேரிடராக அறிவிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

இதையடுத்து, வாகனத்திலிருந்து இறங்கி வந்த உமர் அப்துல்லா, போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் குறைகளை கேட்டறிந்தார். அப்போது, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை செய்யப்படும் என உறுதி அளித்தார்.

# மின்சாரம் தாக்கிய சிறுவனை காப்பாற்றிய இளைஞருக்கு பரிசளித்தார் பழனிச்சாமி

தன் உயிரை பொருட்படுத்தாமல் மின்சாரம் பாய்ந்த சிறுவனை காப்பாற்றிய இளைஞருக்கு எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பரிசளித்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி சென்னை அரும்பாக்கத்தில் தேங்கி நின்ற மழை நீரில் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது.

அப்போது அந்த வழியாக சென்ற ரேகன் (வயது 8) என்ற 3 ஆம் வகுப்பு மாணவனுக்கு மின்சாரம் பாய்ந்து கீழே விழுந்து உயிருக்கு போராடிக் கொண்டிருந்தான்.

அந்த நேரத்தில் தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் தஞ்சாவூர், ஒரத்தநாட்டைச் சேர்ந்த கண்ணன் என்ற இளைஞர் மோட்டார் சைக்கிளில் வந்தார். அப்போது, சிறுவனை பார்த்ததும் தனது உயிரை பொருட்படுத்தாமல் அச்சிறுவனைக் காப்பாற்றினார்.



இந்நிலையில், சிறுவனைக் காப்பாற்றிய இளைஞரின் துணிவைப் பாராட்டி, அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிச்சாமி அவரை வீட்டிற்கு வரவழைத்து தங்க மோதிரத்தை பரிசளித்துள்ளார்.



## பஹல்காம் தீவிரவாத தாக்குதல்:

# அவசரமாக நாடு திரும்பிய பிரதமர் மோடி விமான நிலையத்திலேயே ஆலோசனை!

ஜம்மு காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் உள்ள பைசரன் பள்ளத்தாக்கில் சுற்றுலாப் பயணிகள் மீது பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 28 பேர் உயிரிழந்த நிலையில், சவுதி அரேபியாவுக்கு இரண்டு நாள் பயணமாக சென்றிருந்த பிரதமர் நரேந்திர மோடி தனது பயணத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார்.

இன்று காலை சவுதியில் இருந்து புதுடில்லி விமான நிலையம் வந்தடைந்த பிரதமர் மோடி, விமான நிலைய வளாகத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருடன் முக்கிய ஆலோசனை மேற்கொண்டார். பின்னர் அங்கிருந்து இல்லத்துக்கு புறப்பட்டார்.

இன்று மத்திய அமைச்சரவை மற்றும் முக்கிய பாதுகாப்புத் துறை அதிகாரிகளுடன் பிரதமர் மோடி ஆலோசனை நடத்துகிறார். அமைச்சரவை கூட்டத்தில் உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அமித் ஷா, காஷ்மீர் சென்றுள்ளார். அங்கிருந்து அவர் டில்லி திரும்புகிறார். அமெரிக்கா சென்றுள்ள நிர்மலா சீதாராமனும் நாடு திரும்புகிறார்.

இந்த நிலையில், பஹல்காம் பகுதியில் அப்பாவி மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய பயங்கரவாதிகளை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. தரை வழியாக இராணுவ வீரர்கள் தேடுதல் பணியை மேற்கொண்டுள்ளனர். அடர்ந்த மரங்கள் நிறைந்த பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருக்கலாம் என்ற காரணத்தால் ஹெலிக்கொப்டர் மற்றும் ட்ரோன் மூலம் தேடுதல் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காஷ்மீர் பயங்கரவாத தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடின், இத்தாலி பிரதமர் மெலோனி உள்ளிட்ட உலகத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். தாங்கள் இந்தியாவின் பக்கம் துணை நிற்கின்றோம் என அவர்கள் கூறியுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரின் அனந்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காம் மலைப் பகுதியில், சுற்றுலாப் பயணிகள் சிலரை இராணுவ உடையில் வந்த பயங்கரவாதிகள் நேற்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுற்றி வளைத்தனர். அவர்களிடம் பெயர் மற்றும் மதத்தை பயங்கரவாதிகள் கேட்டு துப்பாக்கிச் சூடு நடத்தினர். துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்டதும், சுற்றுலாப் பயணிகள் இங்கும், அங்கும் ஓடினர். திறந்த வெளி என்பதால், சுற்றுலாப் பயணிகளால் துப்பாக்கி சூடு தாக்குதலில் இருந்து தப்பிக்க முடியவில்லை.

இந்தத் தாக்குதலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர், பலர் காயம் அடைந்தனர். இது பயங்கரவாதிகள் திட்டமிட்டு நடத்திய தாக்குதல் போல் தெரிகிறது. பயங்கரவாதிகள் துப்பாக்கிச் சூடு நடத்திய இடத்துக்கு பாதுகாப்பு படையினர் விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். காயம் அடைந்தவர்களை உள்ளூர் மக்கள் குதிரைகள் உதவியுடன் மீட்டு அழைத்துவந்தனர். அதன் பின் அங்கு இராணுவ ஹெலிக்கொப்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டு காயம் அடைந்தோர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

முன்னதாக, காஷ்மீரின் புல்வாமா பகுதியில் சி.ஆர்.பி.எப். வீரர்கள் மீது பயங்கரவாதிகள் 2019 இல் நடத்திய தாக்குதலில் 47 வீரர்கள் உயிரிழந்தனர். அதன்பின் பயங்கரவாதிகள் நடத்திய மிகப் பெரிய தாக்குதல் இது. அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நிலையில், இந்த தீவிரவாத தாக்குதல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





# பாப்பரசர் பிரான்சிஸுக்கு இன்று பொதுமக்கள் அஞ்சலி

மறைந்த போப் பிரான்சிஸ் உடல், பொதுமக்கள் அஞ்சலிக்காக இன்று செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்துக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இறுதிச் சடங்கு சனிக்கிழமை நடைபெறும் என வத்திக்கான் நிர்வாகம் அறிவித்துள்ளது.

உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் மதத் தலைவரான போப் பிரான்சிஸ் நேற்று முன்தினம் தனது 88 ஆவது வயதில் காலமானார். கடந்த சில ஆண்டுகளாகவே உடல்நலமின்றி இருந்த அவர், அவ்வப்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

எனினும் தேவாலயப் பணிகளை அவர் தொடர்ந்து செய்து வந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு அவர் ஆசி வழங்கினார்.

இந்நிலையில் மறுநாளான திங்கள்கிழமை காலையில் உள்ளூர் நேரப்படி காலை 7.35 மணிக்கு காலமானார். பெருமூளை பக்கவாதம், கோமா, இதயம் செயலிழப்பு என அடுத்தடுத்த பாதிப்புகளால் அவரது உயிர் பிரிந்ததாக வாடிகன் தெரிவித்தது.

இறப்புக்கான காரணம் குறித்த மருத்துவ அறிக்கையில் இரண்டாம் வகை நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், சுவாசக் கோளாறு, நிமோனியா உள்ளிட்ட நீண்டகால உடல்நலப் பிரச்சினைகளும் விவரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், திறந்த சவப் பெட்டியில் போப் பிரான்சிஸ் உடல் வைக்கப்பட்டிருக்கும் முதல் புகைப்படம் மற்றும் காணொலியை வத்திக்கான் நேற்று வெளியிட்டது. அதில், மறைந்த போப்பாண்டவரின் உடல் சிவப்பு நிற வழிபாட்டு அங்கி அணிவிக்கப்பட்டு தலையில் மிட்ரே என்ற தலைப்பாகை மற்றும் கைகளில் ஜெபமாலையுடன் வைக்கப்பட்டு இருப்பது தெரிகிறது.

வத்திக்கானில் அவர் வசித்த காசா சாண்டா மார்ட்டா இல்லத்தின் தனிப்பட்ட தேவாலயத்தில் இந்தப் படம் எடுக்கப்பட்டுள்ளது. போப் பிரான்சிஸ், அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸ் நகரில் பிறந்தவர். லத்தீன் அமெக்காவில் இருந்து தேர்வு செய்யப்பட்ட முதல் போப் என்ற பெருமைக்குரியவர். கடந்த 2013 மார்ச் மாதம் அவரது பதவிக் காலம் தொடங்கியது. 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அவரது பதவிக் காலம் கருணை, பணிவு, சீர்திருத்தம், ஏழைகள் மீதான உலகளாவிய கவனம் உள்ளிட்ட சிறப்புகளை கொண்டிருந்தது.

போப் ஆண்டவர் மறையும்போது அவரது உடலை வத்திக்கனில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் பேராலயத்தில் நல்லடக்கம் செய்வது பாரம்பரிய வழக்கமாகும். ஆனால் போப் பிரான்சிஸ் தனது உடலை ரோமில் உள்ள புனித மேரி மேஜர் பேராலயத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என இறுதி சாசனத்தில் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் தனது கல்லறை எளிய முறையில் எவ்வித அலங்காரமும் இன்றி அமைக்கப்பட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில் போப் பிரான்சிஸ் உடல் அவரது இல்லத்திலிருந்து பொதுமக்களின் அஞ்சலிக்காக செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்துக்கு இன்று எடுத்துச் செல்லப்படுகிறது. அங்கு சனிக்கிழமை காலை 10 மணிக்கு இறுதிச் சடங்கு தொடங்க உள்ளது.

இதில் உலகம் முழுவதிலும் இருந்து கார்டினல்கள், பேராயர்கள், ஆயர்கள் மற்றும் பாதிரியார்கள் கலந்து கொள்கின்றனர். மேலும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முதல் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வரை பல்வேறு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொள்கின்றனர். இதையடுத்து போப் பிரான்சிஸ் உடல் ரோம் நகரில் உள்ள புனித மேரி பேராலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட உள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் வத்திக்கான் நகருக்கு வெளியில் அடக்கம் செய்யப்படும் முதல் போப் என்ற பெருமையை பிரான்சிஸ் பெறுவார். போப் பிரான்ஸ்சிஸ் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அவர் பிறந்த அர்ஜென்டினாவில் ஒரு வாரத்துக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது.





# பாப்பரசர் பிரான்சிஸின் இளமைக்கால காதல்

பாப்பரசர் பிரான்சிஸ் இளமைக்காலத்தில் காதல் வலையில் விழுந்துள்ளார் என்ற சுவாரஸ்ய தகவல் தற்போது வெளிவந்துள்ளது.

ஆர்ஜன்ரீனாவில் பிறந்த ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ என்ற பெயர் கொண்ட பாப்பரசர் தனது 12 ஆவது வயதில் அமலியா டாமோன்டே என்பவருக்கு காதல் கடிதம் கொடுத்துள்ளார்

அந்த கடிதத்தில் உன்னைத் திருமணம் செய்யவில்லை என்றால், பாதிரியாராகச் செல்வேன் என தெரிவித்துள்ளார்.அந்தக் காதல், நிராகரிப்பு அவரின் எதிர்காலத்தையும் அமைத்து விட்டது.

இது தொடர்பாக பல ஆண்டுகள் கழித்து ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு அமலியா டாமோன்டே அளித்த நேர்காணலில், பெர்கோக்லியோ அளித்த கடிதத்தை நினைவு கூர்ந்தார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், “அவர் (பாப்பரசர்) எழுதிய கடிதம் இப்போதும் எனக்கு நினைவிருக்கிறது. ஒரு காகிதத்தில் வெண்மை நிற வீட்டை வரைந்திருந்தார். அதன் மேற்கூரை சிவப்பு நிறத்தில் இருந்தது. எதிர்காலத்தில் நம் திருமணத்துக்குப் பிறகு உனக்காக நான் வாங்கப்போகும் வீடு இது” என அக்கடிதத்தில் எழுதியிருந்தது.

“நான் உன்னைத் திருமணம் செய்யவில்லை என்றால், பாதிரியாராகச் சென்றுவிடுவேன்” எனவும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இது குழந்தைத்தனமான செயல்கள்;அதற்குமேல்வேறொன்றுமில்லை என பிற்காலத்தில் அளித்த நேர்காணலில் டாமோன்டே பகிர்ந்து கொண்டார்.

அந்த வயதில் என்னுடைய பெற்றோர் மிகவும் கண்டிப்புடன் இருந்தனர். அதனால் அக்கடிதம் பிற்காலத்தில் கவனிக்கப்படாமலேயே போனது எனக் குறிப்பிட்டார்.

“ஒரு பையனிடமிருந்து உனக்கு கடிதம் வருகிறதா என ஆவேசத்துடன் பேசி என்னை பள்ளிக்கு அழைத்துச் சென்றுவிட்டார் என் தாய். அதன்பிறகு நாங்கள் இருவரும் சந்திக்காதபடி என் தாய் என்னை விலக்கியே வைத்திருந்தார்” என டாமோன்டே நினைவுகளைப் பகிர்ந்தார்.

நீண்ட காலத்துக்குப் பிறகு பெர்கோக்லியோ (பாப்பரசர் பிரான்சிஸ்) குடும்பம் மெம்பிரில்லர் சாலையில் இருந்து விலகிச் சென்றது. மறுபுறம், அமலியா டாமோன்டேவுக்கும் திருமணம் நடைபெற்றது. அதன்பிறகு, அமலியா டாமோன்டே மீண்டும் அவரைத் தொடர்பு கொள்ள நினைக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.



கனடா முரசு
புதன்கிழமை 23/04/2025

**சீனாவை ஆபத்தான நாடாக அறிவித்தது கனடா அரசு**

தேசிய பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவித்து சீனாவை ஆபத்தான நாடாக கனடா அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை 02



# பொதுத்தேர்தலில் யாருக்கு வெற்றி?

**கனடாவில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் தற்போதைய பிரதமர் மார்க் கார்னி சார்ந்த லிபரல் கட்சிக்கு அதிக ஆதரவு கிடைக்க வாய்ப்புள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

**கனடாவில் அடுத்த ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது.**

**இந்தநிலையில், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கப்போவது யார் என கேள்வி எழுந்துள்ளது. இதற்காக வாக்கெடுப்பொன்று நடத்தப்பட்டுள்ளது.**

இந்த வாக்கெடுப்பில், கனடாவின் தற்போதைய பிரதமரான மார்க் கார்னி சார்ந்த லிபரல் கட்சிக்கு மக்களிடையே 43.7 சதவிகித ஆதரவு கிடைத்து உள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

கன்சர்வேட்டிவ் கட்சிக்கு 36.3 சத விகிதமும், ஜக்மீத் சிங்கின் நியூ டெமாக்ரட்ஸ் கட்சிக்கு 10.7 சதவிகித ஆதரவும் கிடைத்துள்ளதாக குறிப் பிடப்பட்டுள்ளது.

இதே நிலை தேர்தலிலும் எதிரொலிக்குமானால், மார்க் கார்னியின் லிபரல் கட்சி தனிப்பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்க வாய்ப்பு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# டொனால்ட் ட்ரம்பை எதிர்கொள்வதற்கு வலுவான ஆணை கோருகிறார் கார்னி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி அச்சுறுத்தலைச் சமாளிக்க வாக்காளர்கள் தனக்கு வலுவான ஆணையை வழங்க வேண்டும் என்று கனேடிய பிரதமர் மார்க் கார்னி மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

ட்ரம்பின் வரிகளும், இணைப்பு பற்றிய பேச்சும் மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும், கனடா அமெரிக்காவை நம்பியிருப்பதைக் குறைத்து அதன் பொருளாதாரத்தை மறுசீரமைக்க வேண்டும் என்றும் ஏப்ரல் 28 ஆம் திகதி தேர்தலுக்கு முன்னதாக நடந்த கருத்துக் கணிப்புகளில் முன்னணியில் இருக்கும் கார்னி கூறியுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் லிபரல் தலைவராக போட்டியிடுவதற்கு முன்பு எந்த அரசியல் அனுபவமும் இல்லாத 60 வயதான முன்னாள் மத்திய வங்கியாளர் ஆவார்.

அடுத்த நான்கு ஆண்டுகளில் கனடாவில் சுமார் 130 பில்லியன் டொலர் கூடுதல் செலவினங்களை உறுதியளிக்கும் லிபரல் தளம், 2025/26 பற்றாக்குறை



கனடாவில் 62.3 பில்லியன் டொலர்களாக இருக்கும் என்று கணித்துள்ளது.

இது கடந் டிசம்பரில் கணிக்கப்பட்ட 42.2 பில்லியன் டொலர்களை விட மிக அதிகம்.



# ஒன்டாரியோவில் STEM கல்விக்காக 750 மில்லியன் டொலர் முதலீடு

ஒன்டாரியோ மாகாணத்தில் உள்ள கல்லூரிகள் மற்றும் பல் கலைக்கழகங்களில் அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) தொடர்பான பாடநெறி களுக்கான நிதியை அதிகரிக்க, மாகாண அரசு தீர்மானித்துள் ளது.

இதன்படி, இந்த துறைகளில் 750 மில்லியன் டொலர் முதலீடு செய்ய உள்ளதாக அறிவித்துள்ளது. கல்லூரி கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அமைச்சர் நோலன் குவின் இது குறித்து அறிவித்துள்ளார்.

இந்த நிதியினால் ஆண்டுதோறும் 20,500 புதிய மாணவர்களுக்கு STEM துறையில் கல்வி பயல்வதற்கான வாய்ப்பு உருவாகும் என தெரிவித்தார்.

மாணவர்களில் முதலீடு செய்வது, எதிர்காலத்தில் நிலைத்த மற்றும் மாற்றங்களுக்கேற்ப தக்க வளமான பொருளாதாரத்தை உருவாக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள் ளார்.

குறிப்பாக, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வர்த்தக போர் தீவிரமடைந்து வரும் நிலையில், இது முக்கிய பங்கு வகிக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

STEM பாடநெறிகளுக்கான இந்த புதிய நிதி, கல்வி நிறுவனங்கள் 2025 முதல் 2030 வரை செல்லும் செயல் பாட்டு நிதி ஒப்பந்தங்களை கையெ ழுத்திட்டு உறுதி செய்ததும், உடனடி யாக வழங்கப்படும் என மாகாண அரசு அறிவித்துள்ளது.



## சீனாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனேடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு தலையீடு, சைபர் நடவடிக்கைகள் மற்றும் ஆர்க்டிக் பிராந்தியத்தில் மூலோபாய அபிலா ஷைகளை மேற்கோள் காட்டி, சீனாவை நாட்டின் முதன்மையான தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலாக அடையாளம் கண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவின் கூட்டாட்சி தேர்தல் பிரசாரம் இறு வாரத்தில் உள்ள நிலை யில் , கனடா-சீனா உறவுகள் குறித்த பிரதமர் மார்க் கார்னியின் நேரடி அறிக்கை இதுவாகும்.

மேலும் தொலைக்காட்சி விவா தத்தின் போது, கனடாவுக்கு மிகப்பெரிய புவிசார் அரசியல் அச்சுறுத்தல் என்னவென்று வினவியபோது, அது சீனா தான் என்று கார்னி நேரடியாகக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.



# விக்டோரியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் ஒருவர் பலி

கனடாவின் விக்டோரியாவில் இடம்பெற்ற படகு விபத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். வசந்தக் காலம் தொடங்கியுள்ள நிலையில், இந்த உயிரிழப்பு பதிவாகியுள்ளது.

விக்டோரியாவுக்கு கிழக்கே உள்ள ஹரோ ஸ்ட்ரெயிட் பகுதியில், பாறையுடன் படகு மோதியதில் ஒருவர் உயிரிழந்தார் எனவும் மேலும், ஒருவர் மீட்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

'அபாச்சி' எனும் படகு சான் ஜுவான் தீவின் பாறைகளில் மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

படகில் இருந்த ஒருவர் மெரீன் ரேடியோ மூலம் 'மேடே' (அவசரக் காப்புக் கோரிக்கை) அழைப்பு அனுப்பினார் என அமெரிக்கக் கடலோரக் காவல் படை (U.S. Coast Guard) தெரிவித்துள்ளது.

அவசர அழைப்பைப் பெற்ற உடனே, வொஷிங்டன் மாநிலத்தின் ஏஞ்சல்ஸ் துறைமுகத்தில் இருந்து இரண்டு மீட்புப் படகுகள் மற்றும் ஹெலிகாப்டர் ஒன்று அனுப்பப்பட்டன.

சான் ஜுவான் தீவின் கேடில் பாயிண்ட் பகுதியில் கடலில் படகுப் பாகங்கள் மிதந்த இடத்தில் மீட்பு குழுவினர் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்எனதெரிவிக்கப்படுகின்றது.

# இளம் தலைமுறையினர் இடையே கஞ்சா பயன்பாடு அதிகரிப்பு



கனடாவில் இளம் தலைமுறையினர் மத்தியில் கஞ்சா போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் சில மாகாணங்களில் கஞ்சா சார்ந்த திண்பண்டங்கள் உற்பத்தி செய்யயும் சட்டப்பூர்வமாக விற்பனை செய்ய அனுமதியளிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து இளம் மாணவர்கள் மத்தியில் கஞ்சா பயன்பாடு 26 வீதமாக அதிகரித்துள்ளதாக அண்மைய ஆய்வு ஒன்று தெரியவைத்துள்ளது.

இந்த ஆய்வு ஜாமா நெட்வர்க் ஓபன் JAMA Network Open என்ற மருத்துவ பத்திரிகையில் வெளியானது. கஞ்சா கலந்த சாக்லேட்டுகள், சோடா, டெசர்ட் என பல்வேறு உற்பத்திகள் இளம் தலைமுறையினரை அதிகம் கவர்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த கஞ்சா கலந்த உணவுப் பொருள்களின் பயன்பாடு 43 வீதமாக அதிகரித்துள்ளது. 12 முதல் 17 வயது வரை 1,06,000 மாணவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

கியூபெக் மாகாணத்தில் மட்டும் இந்த அளவில் மாற்றம் இல்லை. காரணம், அங்கு இன்னும் இந்த வகை தயாரிப்புகள் விற்பனைக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.